## மேற்காசியப் போரினால் தட்டுப்பாடு!

# சமையல் எரிவாயு சிலிண்டர் நெருக்கடியை சரி செய்க!

## பிரதமருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, மார்ச் 13–**

**மேற்காசிய போரினால் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், தமிழ்நாட்டில் வீடு, வணிக மற்றும் தொழில்துறை நுகர்வோருக்கு தடையற்ற எல்.பி.ஜி (LPG) விநியோகம் செய்வதை உறுதி செய்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி, இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**



மேற்கு ஆசியாவில் மோசமடைந்து வரும் போர் சூழ்நிலையால் எல்.பி.ஜி (LPG) விநியோகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியினைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் வீடு, வணிக மற்றும் தொழில்துறை நுகர்வோருக்கு தடையற்ற எல்.பி.ஜி (LPG) விநியோகம் செய்திடத் தேவையான நடவடிக்கைகளைமேற்கொள்ள உரிய அமைச்சகங்களுக்கு உத்தரவிடுமாறு கோரி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

### சீர் குலைந்துள்ள விநியோகம்!

அக்கடிதத்தில், ஈரான் மற்றும் பிற வளைகுடா நாடுகளை உள்ளடக்கிய வளைகுடா பகுதிகளில் தொடரும் போர், இந்தியாவிற்கான எல்.பி.ஜி (LPG) விநியோகத்தினை வெகுவாகச் சீர்குலைத்துள்ளதாகவும், மேற்கு ஆசியாவிலிருந்து எல்.பி.ஜி (LPG) இறக்குமதியை இந்தியா அதிகமாகச் சார்ந்திருப்பது நிலைமையை மோசமாக்கியுள்ளது என்றும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் வீட்டு உபயோகத்திற்கான எல்.பி.ஜி (LPG) தேவை மாதத்திற்கு சுமார் 200 மெட்ரிக் டன் என்றளவிலும், வணிக / தொழில் துறைகளின் தேவை மாதத்திற்கு மேலும் 20 மெட்ரிக் டன் என்றளவிலும் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், விநியோகக் கட்டுப்பாடுகளைக் கருத்தில்கொண்டு, எண்ணெய் நிறுவனங்கள் வீட்டு இணைப்புகளுக்கு முன்னுரிமை அளித்து, தொழில்துறை மற்றும் வணிக நுகர்வோருக்கு எல்.பி.ஜி (LPG) விநியோகத்தை நிறுத்தியுள்ளது குறித்து தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

### ஹோட்டல் துறைக்கு நெருக்கடி!

ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் சிறிய உணவகங்கள் பெரும்பாலும் தங்கள் செயல்பாடுகளுக்கு எல்.பி.ஜி (LPG) விநியோகத்தையே சார்ந்துள்ள நிலையில், எல்.பி.ஜி (LPG) விநியோகத்தின் திடீர் நிறுத்தம் ஹோட்டல் துறைக்கு ஒரு நெருக்கடியை உருவாக்கியுள்ளதுடன், அவற்றில் பல மூடப்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தனது கடிதத்தில் வருத்தத்துடன் அவர் குறிப்பிட்டுள்ளார்.



பெருமளவில் தொழில்மயமாக்கப்பட்ட மாநிலமான தமிழ்நாட்டில், பெரிய தொழில்கள் தவிர, அதிக எண்ணிக்கையிலான குறு, சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்கள் உள்ளதாகவும், பெரும்பாலானதொழில் துறை நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளுக்கு எல்.பி.ஜி (LPG)யைப் பயன்படுத்தும் நிலையில், எல்.பி.ஜி (LPG) விநியோகத்தின் திடீர் நிறுத்தம் அவர்களை கடுமையாக பாதிக்கும் என்றும் கவலைபடத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இதனால், மேலும் பல சிறு தொழில் நிறுவனங்கள் மூடப்படவேண்டிய சூழலை எதிர்கொள்ள நேரிடுமென்றும், இதனை ஈடுசெய்வதற்கான மாற்று எரிபொருள் மாற்றத்திற்கு அதிக காலமும், கணிசமான செலவும் ஏற்படுமென்று தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

### தடையற்ற விநியோகம் செய்வீர்!

எனவே, தமிழ்நாட்டிலுள்ள வீடு, வணிக மற்றும் தொழில் துறை நுகர்வோருக்கு தடையற்ற எல்.பி.ஜி (LPG) விநியோகம் செய்வதை உறுதி செய்ய சம்பந்தப்பட்ட அமைச்சகம் மற்றும் எண்ணெய் நிறுவனங்களுக்கு உத்தரவிடுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், முன்னெப்போது மில்லாத இந்த நெருக்கடியைச் சமாளிக்க இந்திய அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் தமிழ்நாடு அரசு துணை நின்று, ஆதரவளிக்கும் என்று தனது கடிதத்தில் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

---

## ஈரான் - இஸ்ரேல் போர் : மேற்காசியப் பிராந்தியத்தில் சிக்கித் தவிக்கும்

# தமிழர்கள் தாய்நாட்டிற்குத் திரும்பிட உரிய நடவடிக்கை மேற்கொள்வீர்!

## பிரதமருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, மார்ச் 13–**

**ஈரான்–இஸ்ரேல் போர் பதற்றம் காரணமாக மேற்காசிய பிராந்தியத்தில் சிக்கித் தவிக்கும் தமிழர் களுக்கு உடனடியாக உரிய உதவிகளைச் செய்திடவும், அவர்களைப் பாதுகாப்பாக தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்புவதை உறுதி செய்திடவும் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.**

ஈரான்-இஸ்ரேல் போர் பதற்றம் காரணமாக வளைகுடா நாடுகளில் வாழும் தமிழர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் பத்திரமாக தாயகம் திரும்பிடத் தேவையான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11-03-2026) கடிதம் எழுதியுள்ளார்.

### 19 லட்சம் தமிழர்கள்!

அக்கடிதத்தில், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏராளமானோர் தங்கள் வாழ்வாதாரத்திற்காக வளைகுடா பகுதி முழுவதும் வேலை செய்து வருகிறார்கள் என்றும், இந்த நாடுகளில் 19 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் வசிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், அங்கு நாளுக்கு நாள் தற்போது நிலவி வரும் பாதுகாப்பு நிலைமை அவர்களுக்கும், தமிழ்நாட்டில் உள்ள அவர்களது குடும்பத்தினருக்கும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கவலையோடு குறிப்பிட்டுள் ளார்.

ஈரான் மற்றும் மேற்கு ஆசியாவில் நடந்து வரும் போரினால், மேற்கு ஆசியாவின் சில பகுதிகளில் தற்போது சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மக்களின் பாதுகாப்பு மற்றும் வெளியேற்றம் தொடர்பாக இந்தியப் பிரதமர் அவர்களின் தலையீட்டைக் கோருவதற்காக இந்தக் கடிதத்தைத் தாம் எழுதுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்நாடு அரசு சார்பில் உதவி எண்கள்!

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு அரசு, சென்னையிலும், புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்திலும் 24 x 7 அவசர உதவி எண்களை அறிவித்துள்ளது என்றும், அதன்மூலம் இதுவரை உதவி கோரி சுமார் 2,600 அழைப்புகள் வந்துள்ளன என்றும், அவற்றில் பெரும்பாலானவை இந்தியாவுக்குத் திரும்புவதற் கான உதவியைக் கோரியும், பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து விமானங்கள் கிடைப்பது குறித்து தெளிவு கோரியும் வந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்த அழைப்புகள் மற்றும் அதைத் தொடர்ந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், சிக்கித் தவிக்கும் சுமார் 1,000 தமிழர்களின் விவரங்கள் ஏற்கெனவே தொகுக்கப்பட்டு, தேவையான தொடர் நடவடிக்கை மற்றும் உதவிக்காக வெளியுறவு அமைச்சகம் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள பிராந்தியத்தில் உள்ள சம்பந்தப்பட்ட இந்தியத் தூதரகங்களுடன் அவை பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நிலவி வரும் சூழ்நிலைகள் காரணமாக, பஹ்ரைன், குவைத் போன்ற நாடுகளின் சில இடங்களிலிருந்து விமான நடவடிக்கைகள் தடைபட்டுள்ளன என்றும், இதன் விளைவாக, சிக்கித் தவிக்கும் பலர் சவுதி அரேபியா, கத்தார் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற அண்டை நாடுகளில் உள்ள சர்வதேச விமான நிலையங்களுக்கு சாலை வழியாகப் பயணிக்க வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தியாவுக்கு அவர்களைத் திருப்பி அனுப்ப உரிய விசாக்கள் முக்கியமான தேவையாக தற்போது உள்ளதாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

மேலும், சிக்கித் தவிக்கும் தமிழர்கள் பாதுகாப்பாக தற்போது செயல்பட்டு வரும் விமான நிலையங்களை அடைந்து, விரைவில் இந்தியா திரும்பு வதற்குத் தேவையான போக்குவரத்து அனுமதிகள் மற்றும் விசாக்களை வழங்க இந்திய அரசு உரிய வசதிகளைத் செய்து தர வேண்டுமென்று தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கூடுதலாக சிறப்பு! விமானங்களை ஏற்பாடு செய்க!

இன்றைய நிலவரப்படி, வெளிநாட்டு விமானப் போக்குவரத்து மூலம், அங்கு சிக்கித் தவித்த 5,256 பயணிகள் 16 விமானங்களில் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், அதிக எண்ணிக்கையிலான மக்கள் தங்களை வெளியேற்றக் கோருவதைக் கருத்தில் கொண்டு, பாதுகாப்பாகவும், சரியான நேரத்திலும் அவர்கள் சென்னைக்குத் திரும்புவதற்கு வசதியாக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் கூடுதலாக சிறப்பு விமானங்களை ஏற்பாடு செய்திட வேண்டுமென்று தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### மீனவர்கள் பாதிப்பு!

அதேபோன்று, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 593 மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு, ஈரானில் உள்ள தீவுகளில் சிக்கித் தவித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களை பத்திரமாக தாயகம் கொண்டுவர மீனவர்களின் குடும்பத்தினர் தமிழ்நாடு அரசிடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ள தாகக் குறிப்பிட்டு, மீனவர்களின் பாதுகாப்பையும், அவர்கள் பாதுகாப்போடு தாயகம் திரும்புவதையும் உறுதி செய்திட ஒன்றிய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்கு ஆசிய பிராந்தியத்தில் சிக்கித் தவிக்கும் தமிழர்களுக்கு உடனடியாக உரிய உதவிகளைச் செய்திடவும், அவர்களைப் பாதுகாப்பாக தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்புவதை உறுதி செய்வதற்கு விரைவான நடவடிக்கைகளை எடுத்திடவும், சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கிட வேண்டுமென்றும், எதிர்பாராத இந்த உலகளாவிய நெருக்கடியைக் கையாள்வதற்கு இந்திய அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழ்நாடு அரசு முழு ஆதரவையும் வழங்கும் என்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

---

## ஏ.டி.எம். இல்லாமலே நன்கொடைகளை வாரிச்சுருட்டிய ஒரு

# பிரதமர் இவ்வளவு தரம் தாழ்ந்து பேசுவதா?

ஒரு நாட்டின் பிரதமர் இவ்வளவு தரம் தாழ்ந்த பேச்சை பேச முடியுமா? இந்த கேள்வியைத்தான் மோடியின் திருச்சி பேச்சு எழுப்புகிற கேள்வி தமிழ்நாட்டு மக்கள் பணத்தின் ஏ.டி. எம். ஒரு குடும்பத்தின் கையில் இருக்கிறது என்று எப்படி ஒரு பிரதமரால் பேச முடிகிறது?

இப்படி ஒரு உளறலுக்கு ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா? இதற்கு பதில் வேண்டுமா? ஏ.டி.எம். இல்லாமலே நன்கொடைகளை சட்ட விரோதமாக பல்லாயிரம் கோடிகளில் வாரி சுருட்டி நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு உள்ளானவர் இந்த உத்தமர் மோடி!

தேர்தல் பத்திரம் என்ற ஒன்றை கொண்டு வந்தாரே நினைவிருக்கிறதா?

கருப்புப் பணத்தை பாரத ஸ்டேட் வங்கி வழியாக வெள்ளையாக்கி தன்னுடைய பெயரால் உருவான அறக்கட்டளையில் கொட்டச் சொன்னவரே இந்த மோடி தான்! நிதியை வழங்குங்கள் உங்கள் பெயர்களை மறைத்து வைத்திருக்கிறோம் என்று சொல்லியவரும் இவர்தான்!

அனைத்துக் கட்சிகளுக்கும் வழங்கலாம் என்று பெயரளவில் சொல்லிக் கொண்டு பெரும்பகுதி நிதியை சுருட்டிக் கொண்டது பா.ஜ.க. 2019 இல் இருந்து 2024 வரை இவர்கள் சுருட்டிய தொகை, ரூ.8250 கோடி உச்ச நீதிமன்றம் தலையிட்டு இந்த நிதி சுருட்டல் சட்டவிரோதமானது என்று மோடியின் மண்டையில் ஓங்கி குட்டியது.

நிதி அளித்தவர் பட்டியலை வெளியிட பாரத ஸ்டேட் வங்கிக்கு உத்தரவிட்டது.

மோடி மோசடிக்கு உடந்தையாக இருந்த அந்த வங்கிப் பட்டியலை வெளியிட மாத கணக்கில் தவணை கேட்டது!

உச்ச நீதிமன்றம் ஏற்கவில்லை; அடுத்த சில நாட்களிலேயே வெளியிட வேண்டும் என்று ஆணையிட்டது!

அப்போதும் கூட நன்கொடையாளர்களின் பெயர்களை கண்டு பிடித்து விட முடியாமல் மூடி மறைக்கும் பட்டியலை வெளியிட்டது. மீண்டும் உச்ச நீதிமன்றம் தெளிவான பட்டியலை வெளியிட உத்தரவிட்டது இவை யெல்லாம் வங்கியின் முடிவுகள் அல்ல ;மேலிருந்து மோடி நிதி மோசடியை காப்பாற்ற அரசு எந்திரங்கள் நடத்திய திருவிளையாடல்!


பெயர் பட்டியல் வெளியான பிறகு பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளிச்சத்துக்கு வந்தன. மோடி பெயரிலான அமைப்புக்கு நன்கொடை வாரி வழங்குகிறவர்களுக்கு வரிச் சலுகைகள் காண்ட்ராக்ட் என்று வாரி வழங்கப்பட்டுள்ளன. இந்த விபரங்கள் இப்போதும் இணையத்தில் இருக்கின்றன.

ஊழலை சட்டமாக்கி உச்சநீதி மன்றத்தால் கண்டிக்கப்பட்டவர் தான் இப்போது ஏ.டி.எம். பற்றி இங்கே வந்து காதில் பூசுற்றுகிறார்.

தி.மு.க.வினர் 8 வயது குழந்தையை யும் விட மாட்டார்கள் என்ற மோடியின் பேச்சை மக்கள் நிச்சயம் வெறுக்கவே செய்வார்கள். குழந்தைகளை அரசியலுக்காக பாலுறவுக்குப் பயன்படுத்திய ‘எப்ஸ்டின் ஃ பைலில்’ மோடியின் பெயரும் இடம்பெற்று இருப்பதாக கூறுகிறார்கள்.

அந்த நினைவில் இருந்து இன்னும் மோடி விடுபடவில்லை போலும். சொல்லப்போனால் தொலைக்காட்சி விவாதங்களில் ஈடுபடும் பா.ஜ.க. பேச்சாளர்கள் கூட இப்படி பேசுவதற்கு கூசுவார்கள்.

இதுதான் அவரது ஆன்மீகக் கதை.



**விடுதலை இராஜேந்திரன்**
திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர்